UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE
2, BEATTY ROAD
SINGAPORE 209954

**MINISTRY OF EDUCATION**

Telephone: 62980781
Telefax: 62984677

Ref: UPTLC/2016/P009

28 ஏப்ரல், 2016

# என் வாழ்க்கை பயணம்

அன்புடைய பெற்றோருக்கு,

1 வணக்கம். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு நூலக தினம் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் நிலைய மாணவர்கள் அனைவரும் பங்கேற்றுப் பயனடையும் வண்ணம் சில நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனையொட்டி, 'என் வாழ்க்கை, என் பயணம்' என்ற தலைப்பிலான ஒரு நடவடிக்கையும் இடம்பெறவுள்ளது. அதுபற்றிய விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| **நிகழ்வின் நோக்கங்கள்** | • மாணவர்கள் குடும்ப வரலாற்றை நினைவுகூர்தல்<br>• மூதாதையர்களைப் பற்றியோ அல்லது பெற்றோர்களின் இளம்பருவ நினைவலைகளைப் பற்றியோ எழுதுதல்<br>• மூதாதையர்களின் அல்லது பெற்றோருடைய படங்களை ஆவணப்படுத்துதல் (மின்னூல் வடிவில்) |
| **நடைபெறும் நாள்** | 16, 24 & 26 மே 2016 |
| **இடம்** | உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் |
| **கலந்துகொள்ளும் மாணவர்கள்** | உயர்நிலை 1 முதல் 3 வரை |

2 இந்நடவடிக்கை சிறப்படைய உங்கள் பிள்ளைகளுடைய தாத்தா, பாட்டி (உங்களின் பெற்றோர்) அல்லது பெற்றோராகிய உங்களது இளமைக்காலத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தேவைப்படுகின்றன. அப்படம் அக்காலச் சூழல், பயன்படுத்தப்பட்ட பொருள்கள், மறக்க முடியா நினைவுகள் போன்றவற்றின் பின்னணியில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

3 உங்கள் பிள்ளைகள் அப்படத்தையொட்டி அவர்களின் தாத்தா, பாட்டியின் வாழ்க்கையிலோ அல்லது உங்களது இளம் பருவத்திலோ நடந்த ஒரு சுவாரசியமான சம்பவத்தை எழுத வேண்டும். அவர்களின் எழுத்துப் படைப்புகள் நிலைய இணையத்தளத்தில் மின்னூலாகப் பதிவேற்றம் காணும். நீங்கள் வழங்கும் புகைப்படத்தை நகல் எடுப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் தங்களுடைய ஒத்துழைப்பும் மேலான அனுமதியும் தேவை. உங்கள் பிள்ளைகள் கொண்டுவரும் புகைப்படங்கள் உங்களிடமே திருப்பி ஒப்படைக்கப்படும்.

4 'என் வாழ்க்கை, என் பயணம்' என்ற நடவடிக்கை சிறப்பாக அமைய தங்களுடைய மேலான அனுமதியை விரும்புகிறோம். தங்களுடைய அனுமதியை உறுதிப்படுத்தும் வகையில், கீழே தரப்பட்டுள்ள இசைவு முறியை (Reply Slip) நிறைவுசெய்து உங்கள் பிள்ளையுடைய தமிழாசிரியரிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். இந்நிகழ்வு குறித்து மேலும் விவரம் அறிய விரும்பினால் நீங்கள் ஆசிரியர் திருமதி மைதிலி அவர்களை 62980781 (Ext:514) என்னும் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம். நன்றி!

இப்படிக்கு,

அன்புடன்
திரு அன்பரசு இராஜேந்திரன்
நிலைய இயக்குநர்

## இசைவு முறி (REPLY SLIP)

அன்பு ஆசிரியருக்கு,

வணக்கம். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் பயிலும் என் மகன்/மகள் ________________________________(பெயர்), ____________________(தமிழ் வகுப்பு) நிலையத்தில் 16, 24 & 26 மே 2016 ஆகிய தேதிகளில் நடைபெறும் '*என் வாழ்க்கை, என் பயணம்*' என்ற தலைப்பிலான நடவடிக்கையில்

- கலந்துகொள்ளச் சம்மதிக்கிறேன் ☐ / சம்மதிக்கவில்லை ☐.
- என் மகன்/மகள் கொண்டுவரும் படங்களை நீங்கள் நிலைய இணையத்தளத்தில் மின்னூலாகப் பதிவேற்றம் செய்வதைப் பற்றி நான் அறிகிறேன்.
- புகைப்படங்களை நீங்கள் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கிறேன்☐ / அளிக்கவில்லை☐.

| ________________________ | ________________________ | ____________ |
|---|---|---|
| பெற்றோர் பெயர் | பெற்றோர் கையொப்பம் | தேதி |

28 April 2016

Dear Parent/Guardian,

'*En Vazhkai En Payanam'* – Travelling Down the Memory Lane

1. In observation of UPTLC's Library week, an activity has been designed to involve all students.

| | |
|---|---|
| **Objectives of the activity** | • To enable students to recollect nostalgic moments related to their grandparents or their parents childhood.<br>• To enable students to pen their thoughts on the pictures of their grandparents or parents<br>• Archive their creative writing in the form of *e-book* |
| **Date(s) of activity** | 16, 24 and 26 May 2016 |
| **Venue** | Umar Pulavar Tamil Language Centre |
| **Participants** | Sec 1-3 students |

2. We seek your support in providing us with photographs as mentioned above.

3. Photograph(s) will be returned to you upon completion of your child's/ward's project.

4. Your child's/ward's work and the photograph will be uploaded in the form of *e-book* at UPTLC website.

5. We seek your support and cooperation in this project.

6. Kindly complete the form below.

Thank you

In Partnership

Mr.Anbarasu Rajendran
Centre Director
Umar Pulavar Tamil Language Centre

## Reply slip

Dear Teacher,

I ____________________ parent of ____________________ of Sec _____(in UPTLC)

- Allow/ do not allow my child to participate in '*En Vazhkai ,En Payanam'* Project.
- I have read and understood about the activity and my child's involvement
- I am agreeable/not agreeable to the usage of the photos which will eventually be uploaded in the UPTLC website in the form of *e-book*.

_________________________ ____________________ ________________

Parent's Name Parent's Signature Date